DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
Case No.CC 374/2022
Prosecution witness – PW.5

| | | |
|---|---|---|
| Name | : குமரவேல் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

( A1, A5 present. A2, A4 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed. A3, A6 produced through Video Conference)
26.02.2024 – 02.05 PM
சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.
<u>முதல் விசாரணை</u>:–

1. நான் கமுதியில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியாது. இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியாது.

2. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதல்ல.

3. என் முன்பாக எதிரிகளை போலீசார் விசாரிக்கவில்லை. என் முன்பாக சொத்துக்கள் எதுவும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

கடந்த 24.02.2015ம் தேதி 12.45 மணிக்கு அபிராமம் காவல் நிலைய போலீசார் வழக்கின் மூர்த்தி என்ற எதிரியை வல்லந்தை காலனியில் வைத்து 14.30 மணிக்கு கமுதி காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தபோது மேற்படி எதிரி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்பாக பதிவு செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 16.00 மணிக்கு சிலிப்பி கண்மாய் அருகில் வைத்து சுமார் 6,000/–லிட்டர் கொள்ளளவு கொண்ட தண்ணீர் இரும்பு டேங்கர் ஒன்றையும், டீசலில் இயங்கக்கூடிய ஆயில் இன்ஜின் மோட்டார் ஒன்றையும் கைப்பற்றி தயார்

செய்த அத்தாட்சியிலும், பின்னர் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 65 X 3142 என்ற பதிவு எண் கொண்ட TATA ACE வாகனத்தை கைப்பற்றி தயார் செய்த அத்தாட்சியிலும் நான் கையொப்பம் செய்ததாகவும், என்னுடன் லிங்கம் என்பவரும் சாட்சியாக கையொப்பமிட்டதாக போலீசார் விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளின் மிரட்டலுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.